**புத்த சாசன நிதியம் - 2021**

-----------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

புத்த சாசன நிதியத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கு, நிதிய மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் மற்றும் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, நிதிக் கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதென நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்த நிதிக் கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நம்பிக்கை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக் கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக் கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக் கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களும் நியாயமாகவும் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் ஈடுபாட்டை தீர்மானிக்கப்படுகின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக் கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்களை சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக் கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்காய்விற்காக எழுத்துமூல சான்றுகளின்மை

| | விடயம் | தொகை ரூபா | சமர்ப்பிக்காத சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | பௌத்த தர்ம நூல்கள் | 6,539,327 | மெய்மையாய்வு அறிக்கை | 2022.12.31 இல் உள்ளவாறு தர்ம புத்தக இருப்பு புத்தகக் கணிப்பீடு ஒன்று மேற் கொள்ளப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் மேற்கொள்ள வேண்டிய சீராக்கங்கள் 2023 ஆம் ஆண்டின் கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் குறித்த காலப்பகுதியில் பொருட் கணிப்பீடு மேற் கொள்ளப்பட்டு அறிக்கையை விரைவில் சமர்ப்பிப்பதற்கும் தேவையான சீராக்கங்களை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | சுனாமி உதவி | 1,348,796 | பெறுவனவுகள் மற்றும் நிறுத்தி வைத்தல்கள் தொடர்பான விரிவான தகவல்கள் | சுனாமியால் பாதிப்புக்குட்பட்ட கடற்கரையை அண்மித்த விகாரைகளுக்கு உதவிகள் வழங்குவதற்காக ஒதுக்கீடு செய்த இந்நன்கொடையை எதிர்காலத்தில் நடத்தப்பட | விரிவான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | உள்ள 89 ஆவது நிர்வாக சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் கிடைத்த பின்னர் புத்தசாசன நிதிய கணக்கில் சேர்ப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | |
| (இ) | முற்பணங்கள் மற்றும் ஏனைய பெற வேண்டிய பணம் | 13,031,828 | மீதி உறுதிப் படுத்தல்கள் மற்றும் காலப் பகுப்பாய்வு | குறித்த மீதிகளை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. | மீதிகளை உறுதிப்படுத்தக் கூடிய தகவல்கள், காலப்பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | நடைமுறை பொறுப்பு | 1,712,435 | மீதி உறுதிப் படுத்தல்கள் மற்றும் காலப் பகுப்பாய்வு | அம் மீதிகளை தீர்வு செய்வதற்கு அல்லது திரண்ட நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | மீதிகளை உறுதிப்படுத்தக் கூடிய தகவல்கள், காலப்பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (உ) | கொடுப்பனவு உறுதிச்சீட்டு | 3,427,140 | கொடுப்பனவு கிடைக்க பெற்றதாக பற்றுச்சீட்டுக்கள் | எதிர்காலத்தில் செய்யப்படும் அனைத்து கொடுப்பனவுகளுக்கு அத்தொகை கிடைத்ததாக பெறுவோரிடமிருந்து பற்றுச் சீட்டுக்களை பெற்றுக் கொள்ளுமாறு கண்டிப்பாக விடயப் பொறுப்பு உத்தியோகத்தர்களுக்கு தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | நிதி பிரமாணங்களின் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்பட்டதாக உறுதிப்படுத்தக் கூடிய வகையில் பெறுவோரிடமிருந்து பெறப்பட்ட பற்றுச்சீட்டு உரிய உறுதிச்சீட்டுடன் இணைத்து சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**1.6 பெற வேண்டிய செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெற வேண்டிய தொகை**

| <u>கணக்காய்வு அவதானிப்பு</u> | <u>முகாமைத்துவத்தின் கருத்துரை</u> | <u>பரிந்துரை</u> |
|---|---|---|
| காலப்பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்படாத இருந்த ரூபா 13,031,828 தொகையான பெறவேண்டிய முற்பணங்கள் மற்றும் ஏனைய பெறவேண்டிய காசு மீதியில் ரூபா 1,087,447 தொகை 09 ஆண்டுகளுக்கும் ரூபா 11,944,381 தொகை 06 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட பழைய மீதிகளாக கடந்த ஆண்டுகளின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் அவதானிக்கப்பட்டதுடன் இந்த அறிக்கை திகதி வரையில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அம் மீதிகளை அறவிடு வதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | குறித்த மீதிகளை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.6.2 செலுத்த வேண்டிய தொகை**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| காலப்பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்படாத இருந்த ரூபா 1,712,435 ஆன நடைமுறை பொறுப்பு மீதிகளில் ரூபா 544,409 தொகை 07 ஆண்டுகளுக்கும் 1,168,025 தொகை 06 ஆண்டுகளை விட பழைய மீதிகளாக கடந்த ஆண்டுகளின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் அவதானிக்கப்பட்டதுடன் அம்மீதிகளை தீர்வு செய்வதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | அம் மீதிகளை தீர்வு செய்வதற்கு அல்லது திரண்ட நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நீண்ட காலமாக இருந்து வரும் உரிய மீதிகளை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் |

**1.7 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றம் முகாமைத்துவவ தீர்மானங்களுடன் இணங்காமை.**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதி பிரமாணக் கோவை நிதிப் பிரமாணம் 371(2) | குறித்த ஒரு தரப்பினருக்கு வழங்கப்பட்ட கட்டுநிதி குறித்த செயற்பாடு நிறைவு பெற்றவுடன் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br>03 சந்தர்ப்பங்களில் செலுத்தப்பட்டிருந்த ரூபா 90,000 ஆன முற்பணத் தொகையை தீர்வு செய்வதற்கு 14 நாட்களுக்கு மேற்பட்ட காலம் எடுக்கப்பட்டிருந்ததுடன் முற்பணத்தை தீர்வு செய்யும் வரை எஞ்சிய பணத்தை கையில் வைத்திருந்தமை அவதானிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் குறித்த கால எல்லைக்குள் முற்பணத்தை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உரிய விடயப் பொறுப்பு உத்தியோகத்தருக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும |
| (ஆ) | நிதிப் பிரமாணம் 757 | கணக்காண்டின் இறுதியில் பொருள் கணிப்பீடு மேற் கொள்ளப்பட்டு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அதன் | 2023.08.31 ஆந் திகதியில் உள்ளவாறு பொருட் கணிப்பீடு மேற் கொள்ளப்பட்டுள்ளதுடன் அதன் மூலம் 2021.12.31 இல் உள்ளவாறு | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் குறித்த திகதியில் வருடாந்த பொருட் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டு |

| | | | |
|---|---|---|---|
| | பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | காணப்படுகின்ற நிலையான சொத்துக்கள் பயன்படுத்தப்படுவதாக உறுதிப்படுத்தப்பட்டது. | அறிக்கையை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2 செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதியத்தில் இருந்து படிகள் மானியங்கள் போன்ற கொடுப்பனவின் போது அநேகமான சந்தர்ப்பங்களில் குறித்த காலம் கடந்து சில மாதங்களின் பின்னர் கொடுப்பனவு செய்யப்படுவதாக அவதானிக்கப்பட்டது அதன் பிரகாரம் ரூபா 482,500 கூட்டுத்தொகைக்குரியதாக 01 மாதம் முதல் 10 மாதங்கள் வரையான தாமதம் அவதானிக்கப்பட்டது. | புத்தசாசன நிதியத்திலிருந்து சாமநேர நிறுவனங்களுக்காக கொடுப்பனவுகளை மேற் கொள்ளும் போது முன்னைய மாதத்தில் மேற் கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளுக்கு உரிய பற்றுச்சீட்டுகள் கிடைத்த பின்னர் அடுத்த மாதத்திற்கு கொடுப்பனவு மேற் கொள்ளப்படுவதால் பற்றுச்சீட்டுக்கள் முறையாக கிடைக்காமையால் இவ்வாறான தாமதங்கள் இடம் பெற்றன. எதிர்காலத்தில் பௌத்த அலுவல்கள் ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்கள் மூலம் துரிதமாக பற்றுச் சீட்டுக்களை வரவழைப்பதற்கு வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. | குறித்த காலப்பகுதியில் கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | 2021 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் நிதியத்திற்குரிய பௌத்த தர்ம நூல்கள் இருப்பின் பெறுமதி ரூபா 6,539,327 ஆக இருந்த போதும் அதற்குரிய மெய்மையாய்வொன்று மேற்கொள்ளப்படவில்லை. | 2022.12.31 ஆந் திகதியில் உள்ளவாறு பௌத்த தர்ம புத்தக இருப்பு கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் மேற் கொள்ள வேண்டிய சீராக்கங்களை 2023 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் சீராக்கு வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | 2021.12.31 ஆந் திகதியில் உள்ளவாறு பௌத்த தர்ம புத்தக இருப்பின் பெறுமதி பௌதீக கணிப்பீடு மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | நிதியத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட மீளாய்வாண்டுக்குரிய | பதில் பொருத்தமற்றது. | உரிய விடயங்களை முழுமையாகபூர்த்தி |

| | | | |
|---|---|---|---|
| | செயலாற்றல் அறிக்கையில் 2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுகள் ஒதுக்கீடு செய்த நிதி ஏற்பாடுகளை பயன்படுத்தும் செயலாற்றல், நிதி அல்லாத சொத்துக்களை அறிக்கையிடல் தொடர்பாக செயலாற்றல் மற்றும் புத்தசாசன நிதியத்தின் செயலாற்றல் குறிகாட்டிகள் என்ற தலைப்புகளுக்குரிய தகவல் என்பன உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | | செய்து வருடாந்த அறிக்கையை வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2021 ஆம் ஆண்டிற்குரிய நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் நிதியத்தின் ஒட்டுமொத்த முதலீட்டு தொகையான ரூபா 693,906,565 தொகையில் ரூபா 94,660,000 அதாவது 14 சதவீதத்திற்கு அண்மித்த தொகையொன்ற திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்யப்பட்டுள்ளதுடன் அம்முதலீட்டிற்காக கிடைத்த வட்டி வீதம் 8 சதவீதத்தை விட குறைந்த பெறுமதியொன்றாக இருந்தது. அதன் பிரகாரம் நிதியத்திற்குரிய முதலீடு தொடர்பாக ஆக்கபூர்வமான தீர்மானங்கள் எடுக்கப்பட்டதாக அவதானிக்கப்படவில்லை. . | 2023.03.24 ஆந் திகதி நடைபெற்ற 88 ஆவது நிர்வாக சபையால் திறைசேரி உண்டியல் மற்றும் நிலையான வைப்புகளுக்காக கிடைக்கும் வட்டி விகிதம் சாதகமான வகையில் முதலீடு செய்வதற்கு வழங்கப்பட்டுள்ள அங்கீகாரத்தின் பிரகாரம் 2023.12.08 ஆந் திகதி முதிர்வடைந்த மூன்று திறைசேரி உண்டியல்கள் மக்கள் வங்கியின் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப் பட்டுள்ளன. ஏனைய திறைசேரி உண்டியல்களை பொருத்தமான வகையில் முதலீடு செய்வதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | நிதியத்திற்குரிய முதலீடுதொடர்பாக மிகவும் இலாபகரமான ஆக்கபூர்வமான தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டும். |

## 2.2 செயற்பாட்டு வினைத்திறனின்மை

| **<u>கணக்காய்வு அவதானிப்பு</u>** | **<u>முகாமைத்துவத்தின் கருத்துரை</u>** | **<u>பரிந்துரை</u>** |
|---|---|---|
| வருமான செலவின கூற்றின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது ரூபா 48,446,525 தொகை நிதியத்தின் வருமானமாக கிடைத்திருந்த போதும் அதில் ரூபா 21,766,115 தொகை அதாவது 44 சதவீதம் மாத்திரம் நிதியத்தின் நோக்கத்திற்காக செலவிடப்பட்டிருந்தது. புத்தசாசனத்தை பாதுகாத்தல் மற்றும் போஷித்தல் என்பவற்றை நோக்கமாக கொண்டு மிகவும் பொருத்தமான செயற்பாடுகளுக்காக பணத்தை ஈடுபடுத்துதல் நிதியத்தின் பணியாக | புத்தசாசன நிதியத்திலிருந்து செயற்படுத்தக்கூடிய புதிய செயற்திட்டங்களை இனங்கண்டு எதிர்வரும் ஆண்டுகளுக்காக நம்பிக்கை சபை அங்கீகாரத்துடன் அப்புதிய செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுப்பதாக | நிதியத்திற்கு கிடைக்கும் வருமானத்திற்கு ஏற்ற வகையில நிதியத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக உரிய நிகழ்ச்சிகளை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| இருந்த போதும் வருடாந்தம் நிதியத்திற்கு கிடைக்கும் வருமானத்திற்கு ஏற்ற வகையில் நிகழ்ச்சிகளை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறிய தருகின்றேன். | |

**3. கணக்களிதன்மையும் நல்லாளுகையும்**

**3.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மூலம் வெளியிடப்பட்ட இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாண கோவையின் நிதிப்பிரமாணம் 877 (2) (ஈ) பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 02 மாதங்களுக்குள் நிதியம் தொடர்பான உறுதிப் படுத்தப்பட்ட நிதிக் கூற்றுக்களுடன் செயலாற்றல் அறிக்கை அரச நிதித் திணைக்களத்திற்கு பிரதி ஒன்றுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் அனுப்பி வைக்கப்பட வேண்டிய போதிலும் 2021 ஆம் ஆண்டிற்குரிய நிதிக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் அறிக்கை ஒரு வருடம் மற்றும் 09 மாதங்கள் தாமதத்தின் பின்னர் 2023 நவம்பர் 30 ஆம் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டின் கணக்கு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அக்கணக்கு அறிக்கைகளை 2021 ஆம் ஆண்டின் கணக்காய்வு முடிவடைந்த பின்னர் கணக்காய்விற்கு கையளிக்க கூடியதாக இருக்கும். | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்த பின்னர் 02 மாதங்களுக்குள் நிதிக் கூற்றுக்களுடன் வரைவு செயலாற்றல் அறிக்கையை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

**3.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்துக்கு முன் வைத்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மூலம் வெளியிடப்பட்ட இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாண கோவையின் நிதிப் பிரமாணம் 877(2) (உ) பிரகாரம் நிதியத்தின் நிதி அறிக்கை செயலாற்றல் அறிக்கை மற்றும் கணக்காய்வு அறிக்கை உள்ளடக்கப்பட்டு வருடாந்த செயலாற்றல் அறிக்கை உரிய ஏற்பாடுகளின் கீழ் மும்மொழிகளும் தயாரிக்கப்பட்டு பாராளுமன்றத்துக்கு | 2020 ஆம் ஆண்டிற்குரிய செயலாற்றல் அறிக்கையைப் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அறிய தருகின்றேன். | நிதி பிரமாணங்களின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்கள் முடிவடைவதற்கு முன்னர் ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

| | | |
|---|---|---|
| சமர்ப்பிப்பதற்காக நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்கள் முடிவடை வதற்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2020 ஆம் ஆண்டுக்குரிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை இவ்வறிக்கை திகதி வரை பாராளுமன்றத்திற்கு முன் வைப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | | |

**3.3 உள்ளக கணக்காய்வு**

| <u>கணக்காய்வு அவதானிப்பு</u> | <u>முகாமைத்துவத்தின் கருத்துரை</u> | <u>பரிந்துரை</u> |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவு இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதி பிரமாணம் 133(ஆ) மற்றும் 2009 யூன் 09 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியத்தின் நடவடிக்கைகள் தொடர்பாக உள்ளகக் கணக்காய்வொன்று மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டிற்காக உள்ளகக் கணக்காய்வு ஐயவினாக்கள் கிடைக்கவில்லை. | நிதியத்தின் நடவடிக்கைகள் தொடர்பாக உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். |

**3.4 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| <u>கணக்காய்வு அவதானிப்பு</u> | <u>முகாமைத்துவத்தின் கருத்துரை</u> | <u>பரிந்துரை</u> |
|---|---|---|
| இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 877(1) (இ) பிரகாரம் அடுத்த ஆண்டின் பாதீட்டிற்காக திறைசேரியின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக நடப்பாண்டு செப்டம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2021 ஆம் நிதியாண்டுக்குரிய பாதீட்டுக்காக திறைசேரி அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டு முதல் புத்த சாசன நிதியத்திற்கான பாதீட்டுக்காக திறைசேரி அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறிய தருகிறேன். | பாதீட்டின் செலவினங்களை மேற்கொள்வதற்காக திறைசேரி அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |